**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.14/2020**

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா, அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு ஏப்ரல் மாதம் 01 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : செஞ்சுலட்சுமி | மதம் | : இந்து |
| க/பெ | : ஹேமாத்ரி | ஜாதி | : -- |
| வயது | : 48 | கிராமம் | : புச்சிரெட்டிபள்ளி |
| தொழில் | : இல்லத்தரசி | வட்டம் | : திருத்தணி |

**01.04.2026**
**வா.சா. 1 ன் முதல் விசாரணை**

1. நான் இவ்வழக்கில் 3ம் வாதி ஆவேன். வாதி தரப்பு 1ம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தை நான் சொல்லித்தான் என்னுடைய வழக்கறிஞர் தயார் செய்தார். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். வழக்கு சொத்திற்கான சாகுபடி அடங்கல் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(சாகுபடி அடங்கல் வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பட்டா எண்.676ல் என் மாமியார் சகுந்தலா பெயரில் உள்ள கூட்டு பட்டா தாக்கல் செய்கிறேன். **(கூட்டு பட்டா வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

2. 20.05.2013ம் தேதியிட்டு சகுந்தலாவிற்கு முனியம்மாள் வகையறா எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் அசல் தாக்கல் செய்கிறேன். **(செட்டில்மெண்ட் ஆவணம் வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பட்டா எண்.1017ல் என் மாமியார் சகுந்தலா பெயரில் உள்ள பட்டா இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(பட்டா வா.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பட்டா

எண்.1017ல் என் மாமியார் சகுந்தலா பெயரில் உள்ள பட்டா இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(பட்டா வா.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

01.01.1993 முதல் 31.12.2013 வரையிலான வில்லங்க சான்று இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(வில்லங்க சான்று வா.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

(முதல் விசாரணை தொடர்ச்சி ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)